MSF MINISTRY OF SOCIAL AND FAMILY DEVELOPMENT

# கொவிட்-19 தற்காலிக மீட்சி மானியம்



**கொவிட்-19 தற்காலிக மீட்சி மானியம், உயர் விழிப்புநிலை காலக்கட்டத்தில் கொவிட்-19 கிருமிப்பரவலால் பாதிப்படைந்தோருக்கு உதவி வழங்க முடியும்[1]**

**விண்ணப்பிக்கும் காலம் 31 ஜூலை 2021 வரை நீட்டிப்பு**

| | |
|---|---|
| குறைந்தது ஒரு மாதத்திற்கு சம்பளமில்லாத கட்டாய விடுப்பு | **$700** வரை ஆதரவு |
| குறைந்தது ஒரு மாதத்திற்குக் குறைந்தபட்சம் 50% சம்பள இழப்பு | **$500** வரை ஆதரவு |
| சொந்தத் தொழில் செய்வோருக்குக் குறைந்தது ஒரு மாதத்திற்குக் குறைந்தபட்சம் 50% நிகர வர்த்தக வருமான இழப்பு | |

[1] வருமான இழப்பு அல்லது சம்பளமில்லாத கட்டாய விடுப்பு 2021 மே 16ஆம் தேதிக்கும் ஜூலை 31ஆம் தேதிக்கும் இடையில் நிகழ்ந்திருக்கவேண்டும். 1 ஜூலை 2021 முதல், தற்போது கொவிட்-19 தற்காலிக மீட்சி மானியம் பெறுபவர்கள், விண்ணப்பம் செய்யும் தருணத்தில் தகுதி நிபந்தனைகளைத் தொடர்ந்து நிறைவேற்றினால், கூடுதல் ஆதரவுக்கு விண்ணப்பிக்கலாம்.

## தகுதி நிபந்தனைகள்

- ✓ 21 வயது அல்லது அதற்கு மேலான வயதுடைய சிங்கப்பூரர்கள் அல்லது நிரந்தரவாசிகள்
- ✓ $21,000 மற்றும் அதற்கும் குறைவான வருடாந்தர சொத்து மதிப்பு கொண்ட வீட்டில் வசிப்பதோடு, ஒன்றுக்கு மேலான சொத்துகள் வைத்தில்லாதவர்
- ✓ வருமான இழப்புக்கு அல்லது சம்பளமில்லாத கட்டாய விடுப்புக்கு முன்பாகக் குடும்ப வருமானம் $7,800 மற்றும் அதைவிடக் குறைவு அல்லது சராசரி தனிநபர் வருமானம் $2,600 மற்றும் அதைவிடக் குறைவு
- ✓ சொந்தத் தொழில் செய்வோர் 2019/2020 ஆண்டில் வருடாந்தர நிகர வர்த்தக வருமானத்தை உள்நாட்டு வருவாய் ஆணையத்திடம் தெரிவித்திருக்க வேண்டும். இதற்குமுன் கொவிட்-19 மீட்சி மானியம் பெற்றவர்கள், விண்ணப்பிக்கும் சமயத்தில் மெடிசேவ் சந்தா பாக்கி எதுவும் இருக்கக்கூடாது
- ✓ ஊழியர்கள் 2019 ஜனவரிக்கும் 2020 டிசம்பருக்கும் இடையில் 6 மாதம் அல்லது அதைவிட அதிக காலம் வேலை செய்திருக்கவேண்டும்

## தகுதி பெறாதவர்கள்

- முழுநேர தேசிய சேவையாளர்கள்
- தற்போது காம்கேர் உதவி பெறுபவர்கள்[2]
- அதே உதவி காலக்கட்டங்களைக் கொண்ட கொவிட்-19 ஆதரவுத் திட்டங்களிலிருந்து[3] தற்போது உதவி பெறுபவர்கள்

[2] உங்களுக்குக் கூடுதல் ஆதரவு தேவைப்பட்டால் அருகிலுள்ள சமூகச் சேவை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்

[3] கொவிட்-19 மீட்சி மானியம், கொவிட்-19 ஓட்டுநர் நிவாரண நிதி, கடலோடிகள் நிவாரணத் தொகுப்புத்திட்டம், எஸ்ஜி ஒற்றுமை பணியிடைக்கால வாழ்க்கைத்தொழில் பாதைகள் திட்டம் - நிறுவனப் பயிற்சி, மற்றும் எஸ்ஜி ஒற்றுமை திறன்கள் திட்டம்

## இணையம்வழி விண்ணப்பம் செய்ய உதவி தேவையா?

ask_SSO@msf.gov.sg

1800 222 0000

**உங்களுக்கு அருகிலுள்ள சமூகச் சேவை அலுவலகத்தை அணுகுங்கள் <go.gov.sg/ssolocator>**

GO.gov.sg

இப்போது முதல் 31 ஜூலை 2021 வரை சிங்பாஸ் பயன்படுத்தி **go.gov.sg/CRGT** இணையப்பக்கத்தில் 24 மணிநேரமும் விண்ணப்பம் செய்யலாம்